## உங்களின் உழைப்பு, உங்களின் இரத்தம்தான் இந்த இயக்கத்தின் வலிமை!

# கழகத்தின் ஒவ்வொரு வெற்றிக்கும் தொண்டர்களே காரணம்!

### சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்கி – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சி!

சென்னை, செப்.26-

**சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில், நடைபெற்ற தி.மு.கழகப் பவள விழாவில், இயக்கம் தொடங்கிய காலத்தில் இருந்து கழகக் கொள்கைகளை முழங்கிய கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**நிகழ்ச்சியில், 75 வயது நிரம்பிய கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி, சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசும் மற்றும் 60 வயதைக் கடந்த 1,000 கழக உடன்பிறப்புகளுக்குப் பொற்கிழியும் வழங்கப்பட்டன.**

**இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பொற்கிழி மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார்.**

**அப்போது கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

தி.மு.கழகத்தின் முப்பெரும் விழா மற்றும் பவள விழாவைக் கொண்டாடும் வகையில் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக நடக்கின்ற ஒரு சிறப்பான நிகழ்ச்சி. அண்ணன் சேகர்பாபு அவர்கள் எந்த நிகழ்ச்சியைச் செய்தாலும் மிகச் சிறப்பாக செய்வார். அதை நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். இந்த நிகழ்ச்சியை சுருக்கமாக முடிக்க வேண்டும் என்று அவரிடத்தில் கூறி இருந்தேன். அதனால், அவரும் மற்ற யாரையும் பேச விடாமல் சுருக்கமாக வரவேற்புரை ஆற்றிவிட்டு, எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார்.

முதல் நிகழ்ச்சி சுருக்கமாக நடைபெற்றாலும், 21 நாட்கள் தொடர்ந்து இந்த நிகழ்ச்சிகள் நடக்கப் போகின்றன என்பது, கண்டிப்பாக சுருக்கமான நிகழ்ச்சி இல்லை என்பதை இங்கு கூறிக்கொள்கிறேன்.

**என்னை அழைத்து அதிக நிகழ்ச்சிகளை நடத்தியவர் அண்ணன் பி.கே.சேகர்பாபு!**

இந்த ஒரு நல்ல வாய்ப்பை அளித்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும், மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் கூறியதைபோல, 2018-ஆம் ஆண்டு கிழக்கு மாவட்டத்தில் அவர் ஏற்பாடு செய்த இதேபோல் ஒரு கருத்தரங்க நிகழ்ச்சிக்கு வர வேண்டும் என்று நீங்கள் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்க வேண்டும், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் வழங்க வேண்டும் என்று அவர் என்னிடம் வேண்டுகோள் வைத்து, நான் வந்திருந்ததை அவர் ஞாபகப்படுத்தினார். அதன்பிறகு, இப்போது 2024. இந்த ஆறு வருடங்களில் மட்டும் கிட்டத்தட்ட 100-க்கும் அதிகமான நிகழ்ச்சிகளில், பல்வேறு நலத்திட்ட உதவிகளை என்னை வைத்து அவர் நடத்தி இருக்கிறார். அவர் சொன்னதைபோல தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்கு சென்றாலும் அந்த மாவட்டச் செயலாளரிடம் நான் வைக்கின்ற ஒரே கோரிக்கை.

**ஒரே கோரிக்கை**

நான் வருகிறேன் எத்தனை நிகழ்ச்சிகள் வேண்டுமானாலும் நடத்துங்கள். ஆனால், எனக்கு பிடித்தமான ஒரு நிகழ்ச்சி என்றால், அது கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளை கௌரவப்படுத்துகின்ற நிகழ்ச்சி அதை நீங்கள் கட்டாயம் நடத்த வேண்டும் என்றுதான் அந்த விண்ணப்பத்தை வைத்து, இதுவரைக்கும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய்க்கு மேல் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி இருக்கிறது என்றால், அது தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே ஒரேயொரு இயக்கம் அது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான்.

நீங்கள் வேறு எந்த இயக்கத்திலேயாவது இதுபோன்ற நிகழ்ச்சி நடந்து பார்த்து இருக்கிறீர்களா? கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதற்கு வாய்ப்பே கிடையாது. ஏனென்றால், வெளியில் உட்கார்ந்து இருப்பவர்கள் கழகத்திற்காக உழைத்த 75 வயதுக்கும் மேற்பட்டவர்கள். நம் கழகம் பவளவிழா கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. அங்கு இருப்பவர்கள் எல்லாம் கழகத்திற்காக பிறந்தவர்கள். கழகத்தோடு வளர்ந்தவர்கள் என்று சொல்லாம். அவர்களுக்கெல்லாம் ஒரு லட்சம் ரூபாய் பொற்கிழி கிட்டத்தட்ட 75 பேருக்கு. இங்கு வந்திருப்பவர்கள் 60 வயது முதல் 75 வயது வரை உள்ள கழகத்திற்காக உழைத்தவர்கள். நீங்களும் கழகத்திற்காக பிறந்தவர்கள். கழகத்தில் வளர்ந்தவர்கள்தான். உங்களுக்கெல்லாம் தலா பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்கவில்லை. நான் கேட்காமல் அவரே ஏற்பாடு செய்து இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக நடத்திக் கொண்டு இருக்கிறார்.



கலைஞரின் நூற்றாண்டை சென்ற ஆண்டு சிறப்பாக கொண்டாடி முடித்தோம். உலகத்திலேயே ஒரு தலைவருக்கு இவ்வளவு சிறப்பான நூற்றாண்டு விழா கொண்டாடியதும் இல்லை. இனியும் கொண்டாடுவதற்கான வாய்ப்புகளும் இல்லை.

**கிழக்கு மாவட்டம்**

கழக நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, அரசு நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, நம் முதலமைச்சர் அவர்களும், கழக தலைவர் அவர்களும் ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்தார்கள். ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களும், ஒவ்வொரு அமைச்சரும் அவர்களின் துறை சார்பாக, அவர்களின் மாவட்டம் சார்பாக, மிகச் சிறப்பாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து இருந்தார்கள். அதற்கெல்லாம் முதலிடம் வகிப்பது, நம் சேகர்பாபு அண்ணன் நம் சென்னை கிழக்கு மாவட்டம் என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்கிறேன்.

**நீங்கள்தான் காரணம்**

கலைஞரின் நூற்றாண்டில் என்று பெருமையாகச் சொல்கிறோம். கலைஞரின் பெருமை, ஐந்து முறை கலைஞர் தமிழகத்தை ஆண்டவர் என்று. ஐந்து முறை கலைஞர் தமிழகத்தில் முதலமைச்சர் ஆனார் என்றால், அதற்கு காரணம் இங்கு வந்திருக்கின்ற கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் நீங்கள்தான். நீங்கள் இல்லாமல் கலைஞர் கிடையாது. நீங்கள் இல்லாமல் கழகம் கிடையாது. நீங்கள் இல்லாமல் அந்த வெற்றி கிடையாது. உங்களின் உழைப்பு, உங்களின் இரத்தம்தான் ஒவ்வொரு வெற்றியையும் கழகத்திற்கு தேடி தந்திருக்கிறது.

சென்ற நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கும் நீங்கள்தான் முழு காரணம் என்று இந்த நேரத்தில் அழுத்தம், திருத்தமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எந்த நெருக்கடி காலத்திலும் வெற்றியாக இருந்தாலும் சரி, தோல்வியாக இருந்தாலும் சரி, கலைஞருடன் கூடவே நின்று, கலைஞருக்காக உழைத்தவர்கள், கழகத்திற்காக உழைத்தவர்கள் நீங்கள்.

**`மிசா' கால நெருக்கடி**

அதற்கு ஒரு சிறிய சம்பவத்தை மட்டும் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பல இடங்களில் சொல்லி இருக்கிறேன். கலைஞருக்கும் உடன்பிறப்புகளுக்குமான தொடர்பு, உறவு. 1976-ஆம் ஆண்டு `மிசா' கால நெருக்கடி. அவசர நிலைக் காலம். ஒன்றிய அரசு அறிவித்து விடுகிறது. அனைத்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். நம் கழகத் தலைவர், இப்போதைய முதலமைச்சர் அவர்கள் கைது செய்யப்பட்டு, கிட்டத்தட்ட ஒரு வருட காலம் சிறையில் இருந்தார்கள்.

இங்கு வந்திருக்கின்ற பலபேர் மிசாவில் கைது செய்யப்பட்டு இருப்பீர்கள். அப்போது ஒன்றிய அரசு நெருக்கடி கொடுத்தது. கலைஞரை தனிமைப்படுத்த வேண்டும். கலைஞரை யாரும் சென்று பார்க்கக்கூடாது. கழகத்தின் மூத்த முன்னோடிகள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் கழகத்தின் உடன்பிறப்புகள் எல்லோரும் கைது செய்யப்பட்டார்கள்.

**திருப்பதி– திருத்தணி**

அப்போது கழக உடன்பிறப்புகள் எல்லாம் கலைஞருக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று வெளியூரில் இருந்து கிளம்பி வந்தார்கள். அதைத் தடுக்க வேண்டும் என்று, சுற்றுலாப் பேருந்துகளை வாடகைக்கு விடுகின்ற கம்பெனிகளுக்கு எல்லாம் காவல்துறை மூலமாக ஒரு அடக்குமுறை கண்டிசன் போட்டார்கள்.

சென்னைக்குச் சென்று கலைஞரைப் பார்க்கிறவனுக்கு, தி.மு.கழகக்காரனுக்கு கார், வேன், பஸ் போன்ற வாகனங்களைக் கொடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால், நம் உடன்பிறப்புகள் சாதாரணமானவர்களா? என்ன செய்தார்கள் என்றால், நாங்கள் திருப்பதிக்குப் போகிறோம். திருத்தணிக்குச் சென்று மொட்டைப் போடப் போகிறோம் என்று சொல்லிவிட்டு, வண்டி எடுத்துக்கொண்டு திருப்பதி, திருத்தணிக்குச் சென்று சாமி கும்பிட்டுவிட்டு அங்கிருந்து நடந்தே சென்னைக்கு வந்து கலைஞரைப் பார்த்து, ஆறுதல் சொன்னவர்கள்தான் கழக உடன்பிறப்புகள். அப்படிப்பட்ட உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

**கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளை கௌரவப்படுத்துகின்ற நிகழ்ச்சி அதை நீங்கள் கட்டாயம் நடத்த வேண்டும் என்றுதான் அந்த விண்ணப்பத்தை வைத்து, இதுவரைக்கும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய்க்கு மேல் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி இருக்கிறது என்றால், அது தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே ஒரேயொரு இயக்கம் அது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான்.**

இது எதுவோ ஒரு இளைஞர் அணிச் செயலாளராக, ஒரு அமைச்சராக வந்து உங்களுக்கெல்லாம் வழங்குவதாக பார்க்கவில்லை. தாத்தா-பாட்டிகளுக்கு ஒரு பேரனாகச் செய்ய வேண்டிய கடமையாகத்தான் இவற்றைச் செய்து கொண்டு இருக்கிறேன். இனியும் தொடர்ந்து செய்வேன் என்று கூறிக்கொள்கிறேன்.

**என்றைக்குமே வேகாது**

சென்ற பாராளுமன்றத் தேர்தல் அந்த வெற்றிக்கும் நீங்கள்தான் காரணம். அந்த வெற்றிக்கான காரணங்கள் மூன்று சொல்வேன். முதல் காரணம் என்னவென்றால், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள். அவர்தான் நமக்கு இந்த வெற்றியைத் தேடிக் கொடுத்தார். நான் தமிழ்நாடு முழுக்க சுற்றுப் பயணம் போனேன். கிட்டத்தட்ட 23 நாட்கள் பயணம் செய்து அனைத்துத் தொகுதிகளிலும் பிரச்சாரம் செய்து, அனைத்துத் தரப்பு மக்களையும் சந்தித்தேன். அப்போது அவர்களிடம் பார்த்தேன், பா.ஜ.க.-வின் மீதான அந்த வெறுப்பு தொடர்ந்து இருந்துக்கொண்டே இருந்தது. அதை தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்தவர், மோடி அவர்கள்தான்.

சென்னையிலேயோ, தமிழ்நாட்டிலேயோ வெள்ளமோ, மழையோ, புயலோ வந்தபோது ஒருமுறைகூட வந்து எட்டிப் பார்க்காத மோடி அவர்கள், தேர்தல் அறிவித்தவுடன், எட்டுமுறை வந்தார். மாதத்திற்கு நான்கு முறை வந்து விட்டுப் போனார். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டில் பிரச்சாரமே முடிந்துவிட்டது.

அப்போதும் அவர், இங்கு வந்து கன்னியாகுமரியில் விவேகானந்தர் மடத்தில், சென்று தியானம் செய்கிறேன் என்று சொல்லி, ஒரு சினிமா சூட்டிங்கூட அவ்வளவு சிறப்பாக நடக்காது. அந்த அளவிற்கு விதவிதமாக கேமரா ஆங்கிள் எல்லாம் வைத்து அவரைப் படம் பிடித்தார்கள். ஆனால், அவரின் பருப்பு வட நாட்டில் கூட வெந்திருக்கலாம், தமிழ்நாட்டில் என்றைக்குமே வேகாது.

**நம் உரிமைகள்**

நம் உரிமைகள் அனைத்தையும் பறித்துக் கொண்டார்கள். இப்போதும் அதற்காக நாம் போராடிக்கொண்டு இருக்கிறோம். மாநில உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டு இருக்கிறோம். கல்வி உரிமைக்காகப் போராடிக் கொண்டு இருக்கிறோம். நேஷனல் எஜுகேஷன் பாலிசி என்று கொண்டு வருகிறார்கள். இதை நீங்கள் ஒத்துக்கொண்டால்தான் அதற்காக உதவித்தொகை கொடுப்பேன் என்று சொல்கிறார்கள். ஆனால், அதில் இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வருகிறது. மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வருகிறது. நம் பெற்றோர்கள், நம் தாத்தா பாட்டி என்ன தொழில் செய்தார்களோ அதைத்தான் நாமும் செய்ய வேண்டும் என்று சொல்கிறது.

அதுமட்டுமல்ல, வெள்ளம் வந்தது, புயல் வந்தது எவ்வளவு பெரிய சேதம் என்று உங்களுக்குத் தெரியும். நம் தலைவர் அவர்கள் எல்லோருக்கும் நிவாரணம் கொடுத்தார். ஆனால், இதுவரைக்கும் ஒன்றிய அரசு நாம் கேட்ட ஒரு ரூபாய்கூட ஒதுக்கவில்லை.

தமிழ்நாட்டில் இருந்து ஜி.எஸ்.டி வரி ஒரு ரூபாய் கட்டினால், வெறும் 28 பைசாத்தான் திருப்பித் தருகிறார்கள். இதையெல்லாம் மக்கள் விரிவாக உணர்ந்ததால்தான் நம் கழகத்திற்கு மீண்டும் ஒரு மிகப்பெரிய வெற்றியைத் தேடிக் கொடுத்தார்கள்.

**மக்கள் பணிகள், சாதனைகள்**

இரண்டாவது காரணம். கழக ஆட்சி அமைந்து கடந்த மூன்றரை வருடங்களில் நம் தலைவர் அவர்கள் செய்திருக்கின்ற மக்கள் பணிகள், சாதனைகள்தான் காரணம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், ஒரு ஐந்து, ஆறு திட்டங்களை மட்டும் குறிப்பிட விரும்புகறேன்.

முதல் திட்டம் மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி. இந்தத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட இந்த மூன்றரை வருடத்தில் மட்டும் 520 கோடிப் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள்.

**காலை உணவுத் திட்டம்**

அடுத்த திட்டம். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். 1-ஆம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை படிக்கக்கூடிய 20 லட்சம் குழந்தைகள் காலையில் பள்ளிக்கூடத்திற்குச் சென்றால் போதும். அவர்களுக்குத் தரமான காலை உணவு கொடுக்கப்பட்டு, அதன்பிறகு கல்வி கொடுக்கிறோம். இதை மற்ற மாநிலங்கள் எல்லாம் இப்போது செயல்படுத்த தொடங்கி இருக்கின்றன. மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக இருப்பதுதான் திராவிட மாடல் அரசு.

அதேபோல் புதுமைப்பெண் திட்டம். அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சென்று மேற்படிப்புப் படித்தாலும் அந்தப் பெண்குழந்தைக்கு புதுமைப்பெண் என்ற திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை. இப்போது அது விரிவுப்படுத்தப்பட்டு, மாணவர்களுக்கு `தமிழ்ப்புதல்வன்' என்ற திட்டம் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒரு திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். இதை நிறைவேற்றவே முடியாது என்று சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவே முடியாது என்று சொன்னார்கள். இருந்தாலும், தலைவர் அவர்கள் கடந்த செப்டம்பர் மாதம் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படுகிறது. சில இடங்களில் குறைகள் இருக்கின்றன. `எங்களுக்கு வரவில்லை' என்று கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். நான் பிரச்சார சுற்றுப்பயணம் செல்லும்போது மகளிர் கேட்கிறார்கள். விரைவில், அதையும் சரிசெய்து நம் தலைவர் அவர்கள் தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் மகளிர் உரிமைத்தொகையைக் கொடுப்பார்.

**மூன்றாவது காரணம்**

இரண்டு காரணங்களைச் சொல்லிவிட்டேன். மூன்றாவது முக்கியமான காரணம். கழகத்திற்காக உழைத்த உடன்பிறப்புகள். கழகத்திற்காக இரத்தம் சிந்திய நீங்கள்தான் அந்தக் காரணம். முப்பெரும் விழாவில் தலைவர் பேசும்போது சொன்னார். அவர் தலைவராகப் பொறுப்பேற்ற அனைத்துத் தேர்தல்களிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் நம் வெற்றிக் கூட்டணி. மிக மிக ஒரு நல்ல கூட்டணி, வெற்றிக் கூட்டணியை நம் தலைவர் அவர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் அமைத்து, அந்தக் கூட்டணியை அரவணைத்துக் கொண்டுபோகிறார் இல்லையா அதுதான் மிகமிக முக்கிய காரணம். அதை சொல்லிவிட்டு தலைவர் சொன்னார். கண்டிப்பாக 2026 சட்டமன்ற தேர்தலிலும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் வெற்றிப்பெறும். அதை நான் எதுவோ திமிராக சொல்லவில்லை. நான் சொல்வதற்கு ஒரே காரணம் கழகத்திற்காக உழைக்கின்ற, வேர்களாக இருக்கின்ற உடன்பிறப்புகள் நீங்கள் இருக்கிறீர்கள் என்ற தைரியத்தால்தான் சொன்னேன் என்று தலைவர் சொல்லி இருக்கிறார்.

எனவே, 2026 சட்டமன்றத் தேர்தலில் வெற்றியை உறுதியாக்க வேண்டும் என்றால், நாம் அனைவரும் மீண்டும் உழைப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். கழகத்தின் சாதனைகள் எல்லாம், மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு நாம் அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு ஒரேயொரு முக்கியமான விஷயம் சொல்லி விடுகிறேன்.

நான் இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு சென்று கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளைப் பார்க்கும்போது, மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும். அதே நேரத்தில் மிகுந்த பொறாமையாகவும் இருக்கும். பொறாமைக்குக் காரணம் என்னவென்றால், நான் தந்தை பெரியார் அவர்களை நேரில் பார்த்தது கிடையாது. ஆனால், இங்கு வந்திருக்கின்ற உங்களில் பல பேர் நேரில் பார்த்து இருப்பீர்கள். அவரின் கூட்டங்களுக்குச் சென்று இருப்பீர்கள். அவரின் பிரச்சாரங்களுக்குப் போய் இருப்பீர்கள். அவருடன் சிறைக்கும் சென்று இருப்பீர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களை நேரில் பார்த்தது கிடையாது. ஆனால், இங்கு வந்திருகின்ற நீங்கள், அவரின் கூட்டத்திற்குச் சென்று இருப்பீர்கள், அவருடன் தேர்தல் பணி ஆற்றி இருப்பீர்கள். நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் பார்த்து இருக்கிறேன். இனமானப் பேராசிரியர் தாத்தா அவர்களை நேரில் பார்த்து இருக்கிறேன். ஆனால், இங்கு வந்திருக்கின்ற நீங்கள் தந்தை பெரியாரை நேரில் பார்த்து இருப்பீர்கள், பேரறிஞர் அண்ணாவை நேரில் பார்த்து இருப்பீர்கள், கலைஞரையும் நேரில் பார்த்து இருப்பீர்கள், இனமானப் பேராசிரியரையும் நேரில் பார்த்து இருப்பீர்கள். அதனால்தான் உங்களை எல்லாம் பார்த்தால் எனக்கு பொறாமையாக இருக்கிறது என்று சொன்னேன்.

இன்றைக்கு உங்கள் அத்தனைப் பேரையும் தந்தை பெரியாரின் மறு உருவமாக, பேரறிஞர் அண்ணாவின் மறு உருவமாக, முத்தமிழறிஞர் கலைஞரின் மறு உருவமாக, இனமானப் பேராசிரியர் தாத்தா அவர்களின் மறு உருவமாக உங்களையெல்லாம் பார்க்கிறேன் என்று கூறுகின்றேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு என்னை அழைத்து, எனக்கு இப்படி ஒரு பெருமையைத் தேடித்தந்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த அத்தனை நிர்வாகிகளுக்கும், வந்திருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும், மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், மாநகர மேயர் பிரியா, ரங்கநாதன், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், தேவ ஜவகர், புனிதவதி எத்திராசன், ஆசாத், மகாதேவன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ராஜசேகர், முரளி, ஐ.சி.எஃப் முரளிதரன், நாகராஜன், ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, வாசு, வேலு, சுதாகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மூர்த்தி, விஜயகுமார், சந்துரு, நாதன், மகேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், கழகச் செய்தித் தொடர்புச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் பிரபு, மண்டலக் குழுத் தலைவர்கள் சரிதா மகேஷ்குமார், கூ.பி. ஜெயின், ஸ்ரீராமுலு, வழக்கறிஞர் பரிமளம், தாகா நவீன், ராகேஷ் ஜெயின், பரிதி இளம்சுருதி உள்பட கழக முன்னோடிகள், கழக முன்னணியினர் மற்றும் இளைஞர் அணியினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.